[1981 மே 6

தொழிற்கல்வி நிலையங்களை தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் திட்டம்.

*வினா எண். 994—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லாத் தொழில் கல்வி நிலை யங்களையும் (Engineering Colleges and Polytechnics) தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் இணைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்போது யு.ஜி.சி. யிலிருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் சில தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக இன் றைக்கு ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் டிகிரிஸ்' வாழ்க்கையில் பயன்படவில்லை என்றும், ஆகவே 'ஜாப் ஓரியன்டட் ஸ்கீமை' ஊக்குவிக்க வேண்டும் என்றும் யு.ஜி.சி. மாநில அரசுக்கு தாக் கீது அனுப்பியிருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சையன்ஸ் பாடங்கள் இல்லாமல் தொழில் நுட்ப அறிவை நாம் வளர்த்துக்கொள்ள முடியாது. அது அடிப்படை அறிவு, ஆகவே அது இருந்து தான் ஆகவேண்டும். ஆனால் அதோடு கூட வேலைவாய்ப்பு உள்ள பயிற்சியைத் தருவதும் நல்லது. அந்தக் கருத்தைதான் கோத்தாரி கமிஷனும் சொல்லி யிருக்கின்றது. யு.ஜி.சி.யும் அந்தக் கருத்தைத்தான் சொல் லிக்கொண்டிருக்கின்றது. ஆகவே பல்கலைக் கழகங்கள் கல் லூரிப் பாடத் திட்டங்களை மாற்றியமைக்கின்றபோது அந்தக் கருத்துக்கு ஒரு நல்ல வடிவம் தருவார்கள். பராசக்திக் கல் லூரி, மதுரையிலே அமெரிக்கன் கல்லூரி போன்ற கல்லூரிகள் இந்தக் கருத்துக்களை ஒட்டி செயல்பட்டுக் கொண்டு இருக் கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தற்சமயம் மிகவும் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற கெமிக்கல் என் ஜினியரிங், எலக்ட்ரானிக் எஞ்சினியரிங் படிப்பிற்கு என்ஜினி யரிங் கல்லூரிகளிலேயும், பாலிடெக்னிக்குகளிலேயும் அதிக முக்கியத்துவம் கொடுத்து. அதிலே அதிகமான மாணவர்களைச் சேர்த்து பயிற்றுவிப்பதற்கு அரசு முன்வருமா?

1981 மே 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையிலே புதிய தொழில்கல்விப் பாடங்களை நடத்துவதில் அதிக விருப்பம் உடையவர்களாக இருக்கிறோம். எத்தகைய பயிற்சிகளை மாணவர்கள் படித்தால் அவர்கள் படித்து முடித்தவுடன் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், நாமும் தேவைக்கான ஆட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையிலே தான் புதிய கோர்ஸ்களை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எத்தனை தொழில் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அதிகமான தொழில் கல்வி நிலையங்களை ஏற்படுத்துகின்ற வகையிலே அதாவது ஆண்டுக்கு 5 அல்லது 6 என்று ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தொழிற்கல்வி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக தொழிற்கல்வியிலே சேருகின்ற மாணவர்களை குறைவாகச் சேர்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போதுதான் தொழிற்கல்விகளிலே அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையிலே சேர்த்துக்கொண்டிருக்கிறோம். மேலும் அதிகப்படியான பாலிடெக்னிக்குகளை சென்ற ஆண்டு கூட ஆரம்பித்தோம். மேலும் தொழிற்கல்விக்கு அரசு நல்ல ஆதரவைத் தந்துகொண்டிருக்கிறது. அதாவது நம்முடைய தேவைக்கேற்ப மாணவர்களைத் தயாரித்துக்கொள்வதா அல்லது அவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ற வகையிலே தொழிற்கல்விகளிலே மாற்றம் செய்வதா என்ற வகையிலேதான் முரண்பாடுகள் மற்ற இடங்களிலே இருக்கின்றன. ஆனால் நம்மைப்பொறுத்தவரையில் நல்ல தொழிற்கல்விப் பயிற்சிகளைக் கொடுத்து மாணவர்களை எதிர் காலத்திலே சீரிய முறையிலே பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலேதான் அதிக அளவு வாய்ப்புக்களைத் தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இளம் வயதிலேயே குழந்தைகளுக்கு தொழிற்கல்வியினைத் கற்றுக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்வதன் காரணத்தால் குழந்தைகளுக்கு இளமையிலேயே தொழில்களின் மீது பற்று அதிகமாக வரும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்கல்வி பயிற்சியை ஆரம்பித்தால் படித்தவர்களுக்கு வேலையில்லாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்க முடியும். வெளிநாடுகளிலே தொழிற்கல்வி பயின்றவர்களுக்குத்தான் அதிகமான அளவிலே வேலைவாய்ப்பு இருக்கின்றது. ஆகவே இங்கேயும் அந்த வகையிலே தொழிற்கல்வியினை அதிகப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

[1981 மே 6

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தொழிற்கல்வியினுடைய பயனை அறிந்ததின் விளைவு தான் நாம் இப்போது அதற்கு அதிகமான ஊக்கத்தைத் தந்துக் கொண்டிருக்கிறோம். அது உண்மையான கல்வியாக இருப்பதால் இந்த அரசு அதிலே அதிக நாட்டம் செலுத்திக்கொண்டிருக் கிறது. ஆகவே எல்லா மாவட்டங்களிலும், எல்லாப் பகுதி களிலும் உள்ள மாணவர்களும் இந்தத் தொழிற்கல்வியின் பய னைப் பெறுவதற்குரிய முயற்சியினை அரசு மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய உணர்வுகளோடு தனிப்பட்டவர்கள் முயற்சிகள் எடுத்தாலும் கூட நாம் அதைப் பயன்படுத்திக்கொள் கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் இந்த இன்ஜினி யரிங் கல்வியினைப் பொறுத்தவரையில் அத்தகைய முயற்சி கள் நல்ல பயனைத் தந்துகொண்டிருக்கின்றன.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தொழிற்கல்வியிலே அதிக ஆர்வம் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத் திலே தோல் பதனிடும் தொழில் அதிகமாக இருக்கின்றது. ஆகவே அங்குள்ள பாலிடெக்னிக்குகளில் லெதர் டெக்னாலஜி என்ற தொழிற்கல்வியினை ஆரம்பிக்க அரசு முன்வருமா? மேலும் தமிழகத்திலேயே சென்னையிலேதான் அத்தகைய கோர்ஸ் இருக்கிறது. அதிலேயும் குறைவான மாணவர்கள் தான் சேர்க்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அந்தப் புதிய கோர்ஸை வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பாலிடெக்னிக்குகளில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, புதிய தொழிற்கல்விப் பாடங்களைப் பொறுத்த வரையிலே அந்தந்தப் பகுதிகளிலே இருந்து ப்ரப்போஸல்ஸ் அர சுக்கு அனுப்பப்படுமானால் அதனை மாநில அளவிலே தொழிற் கல்விக் குழு ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் தந்து தென்னாட்டைச் சேர்ந்த தென்பகுதி தொழிற்கல்விக் குழு ஒப்புதல் தந்து அதற் குப் பிறகு அகில இந்திய அளவிலே ஒப்புதல் தரப்பட்டதற்குப் பிறகுதான் அவற்றை ஆரம்பிக்கிறோம். அது முறையாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆகவே அந்தந்தப் பகுதி களில் உள்ளவர்கள் என்னென்ன தொழிற்கல்விகளை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்களோ அதற்கு அவர்கள் ஒவ் வொருவரும் முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்